සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය

நலன்புரி நன்மைகள் சபை

WELFARE BENEFITS BOARD

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**பதவி வெற்றிடங்கள்**

*நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையும் அனுபவமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.* ***அனைத்துப் பதவிகளும் கொழும்பு தலைமையகத்தில் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.***

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | **நலன்புரி நன்மைகள் ஆணையாளர் (கருத்திட்ட நிதி மற்றும் அறிக்கையிடல்)**<br>**MM-1-1** | 01 | ***தகைமைகள் மற்றும் அனுபவங்கள்***<br><br>***வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 )***<br>*1. கணக்கியல், நிதி, நிதி முகாமைத்துவம், கருத்திட்ட முகாமைத்துவம் அல்லது குறித்த பதவிக்கு நேரடித் தொடர்புடைய விடயப்பரப்பின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.*<br><br>***மற்றும்***<br>*முதலாவது பட்டம் பெற்றதன் பின்னராக , குறித்த பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*<br><br>*2. குறித்த பதவிக்குத் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இடைநிலை மட்டப் பரீட்சையில் (Intermediate Level) சித்தியடைந்திருப்பதுடன், குறித்த துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*<br><br>***உள்வாரி விண்ணப்பதாரர்கள்***<br><br>மேலே வெளிவாரி விண்ணப்பதரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>***சம்பள அளவுத்திட்டம் :*** *ரூ. 91,690 – 10 × 2,480 – 15 × 3,450 – 168,240 (MM 1-1)*<br>***சம்பளப் படிமுறை:*** *ரூ. 81,710/-*<br>***(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2025 இன் 2026.01.01 ஆம் திகதிய அட்டவணை II இன் படி)***<br>*(அரசின் அங்கீகரிக்கப்பட்ட படிகள் திறைசேரி சுற்றறிக்கையின் படி தொடர்பாடல் வசதிகள் உரித்தாகும்)* |
| 02 | **உதவி நலன்புரி நன்மைகள் ஆணையாளர் (நிதி )**<br>**MM-1-1** | 01 | ***தகைமைகள் மற்றும் அனுபவங்கள்***<br><br>***வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)***<br><br>*1. கணக்கியல், நிதி, நிதி முகாமைத்துவம், வர்த்தகம், வணிகக் கல்வி அல்லது குறித்த பதவிக்கு நேரடித் தொடர்புடைய விடயப்பரப்பின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்* |

| | | | |
|---|---|---|---|
| | | | *(UGC) அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.*<br>**மற்றும்**<br>*முதலாவது பட்டம் பெற்றதன் பின்னராக , குறித்த பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*<br>*2. குறித்த பதவிக்குத் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இடைநிலை மட்டப் பரீட்சையில் (Intermediate Level) சித்தியடைந்திருப்பதுடன், குறித்த துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*<br>**<u>உள்வாரி விண்ணப்பதாரர்கள்</u>**<br>*மேலே வெளிவாரி விண்ணப்பதரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.*<br>**சம்பள அளவுத்திட்டம் :** *ரூ. 91,690 – 10 × 2,480 – 15 × 3,450 – 168,240 (MM 1-1)*<br>**சம்பளப் படிமுறை:** *ரூ. 81,710/-*<br>**(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2025 இன் 2026.01.01 ஆம் திகதிய அட்டவணை II இன் படி)**<br>*(அரசின் அங்கீகரிக்கப்பட்ட படிகள் திறைசேரி சுற்றறிக்கையின் படி தொடர்பாடல் வசதிகள் உரித்தாகும்).* |

**வயதெல்லை -**

**<u>உதவி நலன்புரி ஆணையாளர் (கருத்திட்ட நிதி மற்றும் அறிக்கையிடல்) மற்றும் உதவி நலன்புரி நன்மைகள் ஆணையாளர் (நிதி )</u>**

*22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதரர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.*

**பொது நிபந்தனைகள்:**

- ❖ *நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.*

- ❖ *இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னராக 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும்.*

**மாதாந்த ஊதியம்:**

- ❖ *MM 1-1-2025 ரூ. [91,690 – 10 x 2,480 - 15 x 3,450 – 168,240] + அரசு அங்கீகரிக்கப்பட்ட படிகள் , அத்தோடு தங்களது சம்பளத்தில் 8% ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிக்க வேண்டும், அத்துடன் நலன்புரி நன்மைகள் சபை 12% அரச பங்களிப்பாக செலுத்துவதோடு. மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% பங்களிப்பும் செலுத்தப்படும் .*

- ❖ *விண்ணபப்பபடிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்:*
  - http://www.treasury.gov.lk/web/ministry-of-finance/vacancies
  - https://www.wbb.gov.lk/web/si/jobs

- ❖ *பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள்,* **தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.03.19** *ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு* **ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, ஜே.ஆர். ஜயவர்தன மத்திய நிலையம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07** *என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

- *அரசாங்க /கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்*

- *ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், விண்ணப்பங்களை தனித்தனி உறைகளில் இணைத்து ஒவ்வொரு பதவிக்கும் சான்றிதழ்களின் நகல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.*

- *இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியற்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாக கருதப்படும்.*

***ஆணையாளர்***
***நலன்புரி நன்மைகள் சபை***
***நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு***